# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 73/2015 | வா.சா. | : 2 |
| பெயர் | : அசோக்குமார் | த/பெ. | : சுப்பிரமணியன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் கோவில்பட்டி |
| தேதி | : 21.10.2024 | வயது | : 50 /2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

5) வழக்கில் அறிவழகனுக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். அறிவழகன் என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். வழக்கின் விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். அ.வ.எண்.73/2015ல் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை எடுத்துக்கொடுக்கும்படி கோரப்பட்டுள்ளது. யாருடைய இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால், எனக்கும், என் பங்காளிகளுக்கும் பாத்தியப்பட்ட பட்டா பாதையை வேலாயுதம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். நான் வாதியா, சாட்சியா என்றால் சாட்சி. நான் சாட்சியாக இருந்து கொண்டு பரிகாரம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

6) இரண்டு வழக்குகளிலும் குறிப்பிடும் சொத்து ஒரே சொத்தா அல்லது வெவ்வேறு சொத்தா என்றால் ஒரே சொத்து. பிராதில் குறிப்பிடப்படாத விபரத்தை நான் நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சா.சா.ஆ.3 எனது பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். இந்த பட்டா 12.08.2024ம் தேதி இணையவழியில் பெறப்பட்டது. இந்த ஆவணம் 19.10.2023 அன்று 15.24 மணிக்கு வட்டாட்சியரால் கையொப்பமிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நத்தம் பட்டா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நத்தம் பட்டா என்றால் என்ன என்றால் எனக்கு தெரியாது.

7) தாவாச் சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். பூர்வீக சொத்து சம்பந்தமாக வேறு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மூலப்பத்திரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நிரூபண வாக்குமூலத்தில் வழக்குச் சொத்தை அரசு புறம்போக்கு இல்லை என குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நத்தம் பட்டா சொந்த வீடு இல்லாதவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பட்டா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. வழக்கு நிலுவையிலிருக்கும்போது சட்டவிரோதமாக பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே நான் பட்டா வாங்கிவிட்டேனா என்றால் வாங்கிவிட்டேன். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும்.

8) நீதிமன்ற ஆணையர் சர்வே எண்.212/15 சொத்தை ஆய்வு செய்யாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சர்வே எண்.212/15 பழைய புல எண் ஆகும். தற்போது அது சர்வே எண்.532/13 என ஆகிவிட்டது. அதனால் வேலாயுதம் அளக்கக்கூடாது என சொன்னார், சர்வேயரும் தங்களிடம் சர்வே எண்.212/15 குறித்த ஆவணங்கள் இல்லை என்றும் கூறியதால் ஆணையர் அதை அளக்கவில்லை. சர்வே எண்.212/15 ஐ அளக்கவேண்டும் என 1ம் பிரதிவாதி வேலாயுதம் நான்கு முறை அளக்கவேண்டும் என நீதிமன்ற ஆணையரிடம் மெமோ கொடுத்தார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே எண்.212/15 அளக்காததற்கு காரணம் குறிப்பிடவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

9) 1ம் பிரதிவாதி வேலாயுதம் தனது மனைவிடமிருந்து சர்வே எண்.212/15 ஐ கிரையமாக பதிவு ஆவணம் மூலமாக பெற்றவிபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி வழக்குச் சொத்தை பூர்வீகச் சொத்து என கூறிவிட்டு நத்தம் பட்டாவை பெற்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் போலியாக பெற்ற பட்டாவை வைத்து நிரூபண வாக்குமூலத்தில் பொய்யான தகவல்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உயர்நீதிமன்றம் 1ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.212/15ல் 3888 சதுரடி என பட்டாவை திருத்திக்கொடுக்கும்படி மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். இந்த உத்தரவிற்கு

பின்னிட்டு நான் நத்தம் பட்டா பெற்றுள்ளேன் என்றால் நான் இணையதளத்திலிருந்து நகல் எடுத்தேன், பட்டா கேட்டு மனு கொடுக்கவில்லை. நான் தவறான தகவல்களை சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 21.10.2024 கையெழுத்து செய்துள்ளார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2024.10.21 17:22:24 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.